வாக்குமூலம்

நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி

சி.சி.எண்.368/17

வழக்கு சாட்சி - அ.சா.3

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ஐயப்பன் | ஜாதி | |
| தந்தைபெயர் | | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 06.03.23

**(** எதிரி ஆஜர்**.)**

அரசு தரப்பில் முதல் விசாரணை

நான் பிசிபட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் கார்மெண்ட்ஸ் வைத்து தொழில் செய்துவருகிறேன். 22.2.17 அன்று நானும், எனது நண்பர் பாண்டி என்பவரும் காலை 9.30 மணிக்கு தேனி கிருஷ்ணாதியேட்டர் அருகே நின்றுக்கொண்டிருந்தோம். அந்த இடத்தில் போலிசார் வாகன சோதனை செய்துக்கொண்டிருந்தார்கள். அப்போது தேனியிலிருந்து பிசிபட்டி செல்வதற்காக இருசக்கரவாகனத்தில் மதன்குமார் என்பவர் வந்தார். போலிசார் வண்டியை நிறுத்தி விசாரிக்க முற்பட்டபோது அவர் வண்டியைநிறுத்தாமல் சிறிது தூரம் சென்று தடுமாறி கிழே விழுந்துவிட்டார். அவரை பிடித்து போலிசார் விசாரித்தார்கள். அப்போது அவர் பெயர் மதன்குமார் என்றும், அவர் 20.8.17 தேனியிலிருந்து பூதிப்புரம் செல்லும் சாலையில் கிறிஸ்துவ சுடுகாடு அருகே காந்திநகரில் ஒரு மூதாட்டியின் செயினை தான் பறித்ததாக ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அதன்பின்னர் அந்த செயினை பொம்மன்பட்டி டெலிபோன் நகரில் உள்ள தனது வீட்டில் வைத்திருப்பதாகவும் கூறி அந்த 3 1/2 பவுன் நகையை எடுத்து போலிசாரிடம் ஒப்படைத்தார். மேலும், அவரின் புளூகலர் எமகா இருசக்கரவாகனத்தை போலிசார் கைப்பற்றினார்கள். என்னிடம் காண்பிக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1வது சாட்சி கையெழுத்து என்னுடையது தான். அது அசாஆ.2. 22.8.17 அன்று பகல் 12. 15 மணிக்கு தயார் செய்த அத்தாட்சியில் உள்ள 1வது சாட்சி கையெழுத்து என்னுடையது தான். அது அசாஆ.3.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

நான் முதலில் பிசிபட்டிராஜாஜி தெருவில் கார்மெண்ட்ஸ் வைத்திருந்தேன். தற்போது திருப்பூரில் வைத்திருக்கிறேன். பிசிபட்டியில் நான்கு வருடமாக 2013 முதல் 2016 வரை கார்மெண்ட்ஸ் வைத்திருந்தேன். நான் இதற்குமுன்பு இந்த முன்னனியில் பொறுப்பாளராக இருந்தேனா என்றால் இல்லை. தற்போது சிவசேனா கட்சியில் மாவட்ட செயலாளராக இருக்கிறேன். ராஜாஜி தெருவிறகும்கிருஷ்ணாதியேட்டருக்கும் இடையில் 1 கி.மீ துரம் இருக்கும். நான் கார்மெண்ட்ஸ் கடையை காலை 9 மணிக்கு திறந்து மாலை 6 மணிவரை இருக்கும். என்னுடைய கார்மெண்ட்ஸில் 18 நபர்கள் வேலை பார்க்கிறார்கள். மேற்படி கார்மெண்ட்ஸ் என் கஷ்டடியில் இருந்தது என்றாலும், அங்கு வேலை பார்ப்பவர்களின் பொறுப்பு என்னிடம் தான் இருந்தது என்றாலும் சரிதான். பொதுவாக பள்ளி நாட்களில் கிருஷ்ணாதியேட்டர் பகுதியில் வாகன நெரிசல் அதிகமாக இருக்கும் என்றால் சரிதான்.அந்த சமயத்தில் கிருஷ்ணாதியேட்டர் அருகே சிசிடிவி கேமரா பொறுத்தபட்டடிருந்ததா என்று எனக்கு தெரியாது. கிருஷ்ணாதியேட்டர் அருகில் பிசிபட்டியிலிருந்து தேனிக்கு செல்வதற்கு தனிபாதையும், தேனியிலிருந்துபிசிப்படிக்கு வருவதற்க தனிபாதை உள்ளது என்றால் சரிதான். தேனியிலிருந்து பிசிபட்டிக்கு செல்லவேண்டும் என்றால் கிருஷ்ணாதியேட்டர் எதிரே உள்ள வழிவழியாக செல்லவேண்டும் என்றால் சரிதான். அன்யைறதினம் வாகன சோதனை கிருஷ்ணாதியேட்டர் எதிரே நடந்தது. கிருஷ்ணாதியேட்டர் எதிரே தட்டிவிலாஸ் கோட்டல் உள்ளது என்றால் சரிதான். அங்கு சிசிடிவி கேமரா உள்ளது என்றால் தெரியாது. எத்தனை போலிசார் வாகன சோதனையில் ஈடுபட்டிருந்தார்கள் என்றால் 6 பேர்கள் இருந்தார்கள். பொதுமக்கள் எத்தனை நபர்களை வாகன சோதனைக்கு பிடித்து

வைத்திருந்தார்கள் என்றால் நான் பார்க்கும் போது 2 வாகனத்தை பிடித்து வைத்திருந்தார்கள். எதிரியின் வீடு எடெலிபோன் நகரில் எத்தனையாவது தெருவில் எந்த பக்கம் பார்த்த தலைவாசல் என்றால் அது எனக்கு ஞாபகம் இல்லை. எதிரியின் வீட்டிற்கு செல்லவில்லை என்றாம்டெலிபோன் நகர் முன்பே நின்றிருந்தேன் என்றால் சரிதான். டெலிபோன் நகரில் 13 தெருக்கல் உள்ளது என்றால் சரிதான. எதிரியின் வீடு எத்தனையாவது தெருவில் அமைந்துள்ளது என்றால் ஞாபகம் இல்லை. எதிரி வாக்குமூலம் கொடுக்கும் போது எவ்வளவு நேரம் நின்றிருந்தேன் என்றால் எதிரி வாகனத்தில் சென்று விழும் போது கால்மணி நேரம் இருந்தேன். அதன்பின்னர் வீட்டிற்கு சென்றபின்பு போலிசார் அழைத்தன் பேரில் வந்து 12 மணி வரை இருந்தேன். நான் மேற்கூறிய 3 கையெழுத்துகளையும் காவல்நிலையத்தில் வைத்துபோட்டேன் என்றால் சரிதான். மேற்படி கையெழுத்தை படித்து பாரத்து தான் போட்டேன். நான் கையெழுத்து செய்த பேப்பர் தட்டச்சு செய்யப்பட்டிருந்ததா எழுத்தால் எழுதப்பட்டிருந்ததா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. நான் இந்து எழுச்சிமுன்னனி அமைப்பில் இருந்த போது அடிக்கடி காவல்நிலையம் செல்லும் வழக்கம் இருந்து என்றால் சரிதான். மேற்படி அமைப்பில் 2016 முதல் 2021 வரை இருந்தேன். நான் முதல் விசாரணையில் சொன்னதுபோல் அன்றையதினம் சம்பவம் இடம் செல்லவில்லை என்றாலும் காவல்நிலையத்தில் வைத்து கையெழுத்து செய்துவிட்டு போலிசார் கேட்டுக்கொண்டதன் பேரில் உண்மையை மறைத்து பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் போலிசாரின் கையிருப்பு சாட்சி என்பதால் போலிசார் சொன்னதன் பேரில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரி என் முன்பு ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றாலும், எவ்வித அத்தாட்சியும் தயார் செய்யவில்லை என்றால் நான் கையெழுத்து செய்யவில்லை என்றாலும் சரியல்ல.